மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தத் திட்டத்தைத் தொடங்கினாலும், அதைத் தொடர் நிகழ்ச்சியாக நிறைவேற்றுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கு, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிக நிதியை வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் எங்கெல்லாம் விவசாயப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவோ, அங்கெல்லாம் குளிர்பதனக் கிடங்குகளையும், சேமிப்புக் கிடங்குகளையும் ஏற்படுத்தி, அத்தனை விவசாயப் பொருட்களையும் பாதுகாத்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நிறைவேற்றுவதற்கு, துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

15—

நூலகம்

__658—திரு. எச். வசந்தகுமார்:__

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2016 ஆகஸ்ட் 2]

(அ) நாங்குநேரி தொகுதி, ஏர்வாடியில் நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து முதற்கண் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, ஏர்வாடியில் 1-9-1960 முதல் கிளை நூலகம் ஒன்று செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், இருக்கையில் இல்லை. வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, உட்காருங்கள்.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

முற்பகல் 11-10

2. கவன ஈர்ப்பு

தமிழகத்தில் டெங்கு காய்ச்சலைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன், திரு. ப. ரங்கநாதன், திரு. மா. சுப்பிரமணியன், திரு. பி.கே. சேகர்பாபு, திரு. எம்.கே. மோகன், திரு. நா. கார்த்திக் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுடைய*